

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் CIT நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (12.03.2026) மாலை நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் டாக்டர்.சு.பிரபாகர், நகர ஊரமைப்பு இயக்கத் துறை இயக்குநர் கணேசன், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் பாலசுப்ரமணியன், தலைமை வருவாய் அலுவலர் கே.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் சைலேந்தர் (நில எடுப்பு), வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன் (நகரம்), சரவணன்(ஊரகம்) உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.இ.சேகர் தலைமை!

# அம்பத்தூர் தெற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம்!

### மருது அழகுராஜ், கவிஞர் பா.விஜய், நடிகர் அஜய்ரத்தினம் சிறப்புரை!

சென்னை, மார்ச்.13-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், அம்பத்தூர் தெற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு “மனிதநேய விழா-39”, நட்சத்திரங்களை வளர்க்கும் சூரியன்! நம் தமிழ் நிலத்தை காக்கும் நாயகன்! எனும் தலைப்பில், இன்று மாபெரும் புகழரங்கம் 13.03.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, டி.வி.எஸ். அவென்யு, பிரதான சாலை அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் வட்டக்கழகச் செயலாளர் எம்.இ.சேகர் எம்.சி தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ் எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர், எஸ்.கே.சதீஷ்குமார், கே.பிரபு, DR.M.E.S.சந்தீப், த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா, எஸ்.உமா எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.பி முன்னிலை வகிக்கின்றனர்.

மு.ராஜேந்திரன், எம்.திலகம் மணியரசன், சி.வி.ஆறுமுகம், ஆசை ராஜா, வி.ஞானசேகர், ஆர்.எஸ்.அர்ஜீனன், எம்.ஏ.குட்டி, ஜி.சோமசுந்தரம், எம்.பி.கணபதி, பி.முருகேசன், எஸ்.ஆதிமூலம், கே.பிரபு, ஸ்ரீதர், A.N.R. செந்தில்குமார், தேன்மொழி, டி.சந்திரகுமார், எஸ்.கண்ணியப்பன், எம்.விஜயன், நூரின், செ.விஜய், வி.அமுது, எஸ்.புவனேஸ்வரி, அனுசுயா, எஸ்.சுந்தரி, சீதா, பிரியா, எம்.ராஜேஷ், டி.நித்தியானந்தம், செ.சந்திரகுமார், எம்.சின்ராஸ்(எ) ராஜேண், எஸ்.விஜயகுமார், எம்.வினோத்கமார், நோயல் ஜோஸ், எம்.செந்தில்குமார், பி.ஷோபன்பாபு, அ.குமார், எஸ்.ஆர்.அஸ்வின், ஆர்.சூரஜ்குமார், இ.இனியாஸ்ரீ, D.விஜயகுமார், அ.மணியரசன், இளவரசி, பிரவீன்குமார், சாய்சரண், சிவஞானம், அருண்கார்த்திக், நவீன், காட்வின், சுஜித்குமார், பாலசுப்ரமணியம், சரத்குமார், ஹேமந்த்சர்மா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழக செய்தித் தொடர்பு துணைத்தலைவர் திரு.மருது அழகுராஜ், திரைக்கலைஞர், கவிஞர் பா.விஜய், திரைக்கலைஞர் திரு.அஜய்ரத்தினம் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, சன்.முனியாண்டி, மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன் Ex.MLA கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex.MLA கே.சந்துரு சி. மகேஷ்குமார் சங்கரிநாராயணன் EXMLA, தமிழன்பிரசன்னா எஸ்.மணிமுடி வே.உமாகாந்த் கே.எஸ்.எம்.நாதன் எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா பரிதிஇளம்சுருதி MC ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ரகப்பன் தேவஜவகர் ஜி. மகாதேவன் புனிதவதிஎத்திராசன் MC இசட், ஆசாத் MC. மண்டல் குழு தலைவர்கள்: கூஜெயின்ட் ஸ்ரீராமுலு MC சோ வேலு MC பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு எ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் வி.சுதாகர் எம்.சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி பொதுக்குழ உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர் செல்வம் .வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹில் கனி ஆநிர்மலாதேவி இரா.கலைச்செல்வி அம்பத்தூர் தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொ.சேதுராமன்@ பொன்சேட்டு ஏ.கே.டி.பாஸ்கர் பா.மாறன் டி.சுரேஷ்பாபு ஆர்.ஜெயராமன் சோ.மதியழகன் எஸ்.கே.சதீஷ்குமார் எஸ்.எஸ்.சவரிமுத்து எஸ்.எம்.முருகானந்தம் ஏ.வி.தட்சிணாமூர்த்தி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில்விஜய் பா.ஜெகதீஷ் க.வினோத் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர்நானா பா. ரஞ்சித்விஜயாலயன் நா.துலுக்காணம் வி.தாமோதரன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் MC ராஜேஸ்வரிஸ்ரீதர் பி.விஜயகுமார் எம்.பெரோஸ்கான் எம்.விநாயகம் ஆர்.எஸ். சித்திக் கூ.பா. பிரதிப்குமார் ம.அசோக்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா.வீரமணி அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம் க.முரளிபாபு க.கதிஜா மா.ரமேஷ் து.ஜெகநாதன் பி.ஆர்.இளங்கோவன் பா.பொற்செழியன் ரா. லட்சுமிரங்கசாமி மேனாம்பேடு இ.ராமு அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: வீ.ரவீந்திரன் பு.வீராவெ.ராதாகிருஷ்ணன் மு.இரகு த.கண்ணபிரான் மு.சண்முகம் ஆ.சுந்தர்ராஜ் சீ. லோகநாதன் சு.மோகன்குமார் மு.விஜயகுமார் த.வ.லால் அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பொன்.நவராஜ்ரவி எம்.குணசேகரன் ப.மதி ஆ.இரா.அருண் கோ.சேகர்லால் க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன் மா.குப்புசாமி பி.வி.மூர்த்தி எம்.ஹரிகிருஷ்ணன் கே.செல்லம் கோ.முத்துதமாரசாமி கோ.ராஜ்குமார் ந. குமரவடிவேல் ச.கோதண்டன் கோ.இன்பசேகரன் இ.நடராஜன் ஆர்.விமலன் ஜெ.ஐயப்பன் எஸ்.பரமசிவம் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் என்.பாலசந்தர் நன்றி கூறுகிறார்கள்.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!



**13,03,2026 இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!**
**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி,கே,சேகர்பாபு அறிவிப்பு!**



சென்னை, மார்ச்.13-

அமைச்சர்-மாவட்டச்செயலாளர்பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:

**மனிதநேயம் - 39**

**நட்சத்திரங்களை வளர்க்கும் சூரியன்!**
**நம் தமிழ் நிலத்தை காக்கும் நாயகன்!**

நாள்: 13.3.2026, வெள்ளிக்கிழமை, மாலை: 6.00 மணி

இடம்: டி.வி.எஸ்.அவென்யூ பிரதான சாலை

தலைமை: எம்.இ.சேகர், எம்.சி, வட்டகழகச்செயலாளர்

வாழ்த்துவோர்

திரு. மருது அழகுராஜ், கழக செய்தித் தொடர்பு துணைத்தலைவர்

திரைக்கலைஞர் கவிஞர். பா. விஜய்.

திரைக்கலைஞர். அஜய் ரத்தினம்

அன்புடன்: 89, 89அ வட்ட திமுக
அம்பத்தூர் தெற்குப்பகுதி

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### மு.சரவணன் தலைமையில் உணவு வழங்கல்!

# அயன்புரம் பணிமனையில் கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

### பி.டி.சி.எஸ்.ரவி என்ற சிவகுமார் – பெரம்பூர் த ஆறுமுகம் – எம்.பெருமாள் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 13-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அயன்புரம் பணிமனையில் இன்று 13.03.2026 வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

தலைமை: எம்.சரவணன்

வரவேற்பு: கே.சுப்பிரமணி, ஜி.ஜோஸ்வா ஏசுதாசன், எஸ்.சித்திக் முகமது, ஜெ.தனசேகரன், டி.கேசவன்

முன்னிலை:எம்.செல்வம்,கே.ராஜி, இ.ஜெகதீசன், கே.மனோகரன்,ஜி.எம்.பத்மநாபன்,டி.கே.வேதாச்சலம்.

இந்நிகழ்ச்சியில் மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க தலைவர் PTC எஸ்.ரவி (எ) சிவக்குமார், பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம், பொருளாளர் எம்.பெருமாள் ஆகியோர் பங்கேற்று தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நன்றியுரை க.செல்வம், ஆர்.வெங்கடேசன், ஏ.சீதாராமன், வி.சுரேஷ், ஜெ.அருள்குமரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிகின்றனர்.

இதில் மத்திய சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு அயன்புரம் பணிமனை சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.



கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு 61வது வட்டத்தில் 500 பேருக்கு அறுசுவை மதிய உணவை இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்.

# கலைஞரின் கனவுகளுக்கு - வடிவம் தரும் முதல்வர்!



தலைவர் கலைஞர் 2013-ல் நடந்த மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் நம்மிடமிருந்து ஒதுங்கி இருந்த காங்கிரஸ், எதிரில் இருந்த புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி, ஆகியவற்றிடம் உதவி பெற்று கனிமொழி கருணாநிதி அவர்களை வெற்றிபெறவைத்தார்.

நம்மிடம் 23 சட்டமன்ற உறுப்பினர்களும் தே.மு.தி.க. விடம் 29 உறுப்பினர்களும் இருந்த நேரம்.

2014-ல் நடந்த மேலவைத் தேர்தலில் கலைஞர் அவர்கள் தே.மு.தி.க.விற்கு மேலவை உறுப்பினர் ஒன்றை விட்டுத் தருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார். அவர்களிடம் மறு தகவல் வராமல் காலம் தாழ்த்தியதால் கலைஞர் அவர்கள் தி.மு.க. வேட்பாளராக அண்ணன் திருச்சி சிவாவை அறிவித்தார்.

அறிவிப்புக்குப் பின் லட்சிய வேங்கை திருச்சி சிவா தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றார். நானும் உடன் சென்றேன். பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றவுடன் தலைவர் சொன்னார் “சிவா! உன் திறமைக்கு, தியாகத்துக்கு, தகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறாய், ஆனால் தே.மு.தி.க. வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய சூழல் வரும். நீ விட்டுத் தர வேண்டும். அது எதிர்கால 2016 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குத் தோழமையாக அமையும்” என்றார்.

அதற்கு சிவா அவர்கள், “அதுக்கு என்ன அண்ணா? அவர்கள் வந்தால் மகிழும் முதல் ஆள் நான் தான். கண்டிப்பாக வாபஸ் பெறுகிறேன், நீங்கள் சொன்ன பிறகு மறு பேச்சு ஏது” என்று தியாக மனதோடு கூறினார்.

ஏதோ ஒரு சூழல் நெருக்கடி அன்று அந்த உறவு ஏற்படாமல் தடைபட்டது. அன்று தே.மு.தி.க. ஏற்று இருந்தால் தொடர்ந்து தே.மு.தி.க. ஒவ்வொரு தேர்விலும் ஒரு உறுப்பினர் உருவாகி இருப்பார்கள் அ.தி.மு.க. என்ற ஒரு கட்சி இன்று இல்லாமல், காணாமல் போயிருக்கும். தமிழ்நாடு ஆரோக்கியம் பெற்று இருக்கும். தொடர்ந்து தி.மு.க.வே ஆட்சியில் தொடர்ந்து இருக்கும்.

2014-ல் கலைஞர் அவர்கள் கண்ட கனவை, உறவை, அதே எம்.பி. சீட்டை தே.மு.தி.க.விற்கு கொடுத்து 2026 கூட்டணிக்கு அஸ்திவாரம் போட்டு கலைஞரின் கனவை நிறைவேற்றி இருக்கிறார் இன்று தளபதி.

அதேபோல் 2008-ல் தேசிய அளவில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் தோழமை ஓரிடத்தில் நிற்காது என பிரிந்த சூழலில், கலைஞர் அவர்கள் இரு அமைப் போடும் உறவாட விரும்பினார். காங்கிரஸ் இருந்ததால் கம்யூனிஸ்ட் தோழர்கள் தி.மு.க. விடம் இருந்து பிரிந்தார்கள். கலைஞர் மனம் வருந்தியது. இரண்டையும் தி.மு.க.வின் குடையின் கீழ் கொண்டுவர கலைஞர் கனவு கண்டார். அந்த கனவை 2019 தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் நிறைவேற்றினார்கள்.

1978 வாக்கில் கலைஞரையும், எம்.ஜி.ஆரையும், சேர்த்து வைக்க ஒரிசாவிலிருந்த அன்றைய ஒன்றிய அரசின் காபினெட் அமைச்சர் பிஜு பட்நாயக் தலைமையில் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் இணைப்பது என்று முடிவு செய்தனர். கட்சியின் தலைவராக கலைஞரே தொடர்வது என்றும், முதல்வராக எம்.ஜி.ஆர் தொடர்வது என்றும், கட்சிப் பெயர் தி.மு.க. என்று முடிவு செய்ததாக சொல்லப்பட்டு, பிறகு அந்த செயல் தடைபட்டது. எப்படியோ ஒன்றுபட்ட தி.மு.க.வை உருவாக்க நினைத்த எம்.ஜி.ஆர். மற்றும் கலைஞரின் கனவு அன்று தடைப்பட்டது. கலைஞர் கண்ட அந்த கனவு 2026-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முயற்சியில் பெரும்பகுதி நிறைவேறி இருக்கிறது.


ஆட்சியில் மூன்று முறை முதல்வராக இருந்தவர். கட்சியில் ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பி.எஸ். முதல் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். அ.தி.மு.க.வில் இப்போது உறுப்பினர் குறைவு.

தளபதியின் அடுத்த ஆட்சியில் 2026-2031 நிறைவுக்குள் எள் அளவு, எள்ளின் முனை அளவு, முனையின் மூக்களவு கூட அ.தி.மு.க.வில் உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள்.

அ.தி.மு.க.வின் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவுப்படி தி.மு.க.விலேயே வந்து சேர்ந்து விடுவார்கள்.

2036 -லும் தி.மு.க.வே ஒன்றுபட்டு நிற்கும். வென்று காட்டி மகிழும்.

தி.மு.க.வில் கலைஞர் கண்ட கனவை, தளபதி நிறைவேற்றுகிறார். ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை ஜெயலலிதா கண்ட கனவு “நான் தவறு செய்து விட்டேன், தவறு செய்தமைக்கு மன்னிப்பு கேட்க தயங்க மாட்டேன், மன்னிப்பு கோருகிறேன், இனி என் காலத்துக்கு பின்னும் அ.தி.மு.க. எந்த காலத்திலும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ, உறவோ வைத்துக் கொள்ளாது” என்றார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

ஆனால் எடப்பாடி, ஜெ கனவை சிதைத்து ‘உறவல்ல, அடிமையாகவே மாறி’ அ.தி.மு.க. வை, அடிமை அ.தி.மு.க.வாக மாற்றிவிட்டார்.

“விசுவாசத்திற்கு மறு பெயர் ஓ.பி.எஸ். தான்” என கூறிய ஜெயலலிதா, தான் முதல்வராக முடியாத சூழலில், அ.தி.மு.க. வெற்றி பெற்றால் ஓ.பி.எஸ். தான் முதல்வர் என ஒருமுறைக்கு இருமுறை அடையாளம் காட்டினார். ஜெயலலிதா இல்லாத சூழலில் பன்னீரை முதல்வராக தொடர விடாமல் செய்வது, கனவு கண்ட ஜெயலலிதா அம்மையாருக்கு அசிங்கம் இல்லையா? கனவைச் சிதைக்கலாமா?

தி.மு.க.வை வசைபாடியவர்கள் இன்று, தி.மு.க.வின் புகழுக்கு இசை பாடுகிறார்கள். தி.மு.க.வின் திசைக்கு இசைவு தருகிறார்கள்.

மிட்டாய் கண்டு ஏமாற இருந்த குழந்தைகள் கூட, வேட்டி கட்டிய அன்னை ஸ்டாலின் மடியை கெட்டியாக பிடித்துக் கொண்டனர். தளபதியின் சொற்கண்டு சுவைத்தாருக்கு கற்கண்டும் கைக்கும், கை போகாது, தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும், கை போகாது. தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும் என காங்கிரசார் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஜெயலலிதாவின் கனவைச் சிதைத்து, அ.தி.மு.க.வை, தி.மு.க.வுடன் பகுதி பகுதியாக இணைக்க செயல்படுகிறார் பத்து தோல்வி பழனிசாமி.

தே.மு.தி.க., மக்கள் நீதி மையம், எஸ்.டி.பி.ஐ. என புதிய நண்பர்களைச் சேர்த்து தி.மு.க.வை பலமாக்க கலைஞர் கண்ட கனவை கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் அமைத்து தருகிறார்.



வேளச்சேரி மேற்கு பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி 177வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் பெருமுயற்சியால் தமிழ்நாடு முதல்வர் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொன்பது லட்சம் திட்ட மதிப்பீட்டில் வேளச்சேரி காந்தி சாலை சேவா நகர் பகுதியில் உள்ள டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் திடலில் நடைபயிற்சி பாதை மேடை, நூலகம், ஆகியவற்றிற்கான பணிகளை மாநகராட்சி அதிகாரிகள் அடிக்கல் நாட்டினார்கள். உடன் கழக முன்னோடிகள், ஏரியா பொதுமக்கள் கலந்து கொண்டனர்.